தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திபி. 2017 விடை 11 (25-5-1986) 65 காசுகள் [இதழ் எண்: 72] [பகுதி 11.1

இந்தியப் பொய்ம்மை நிலத்தைக் கட்டிக்காக்கும் இந்தியக் கொடுநெறி ஆட்சிக்கு மிகவும் உதவுவன மதமும், இழிவான கலையும், தொலைக் காட்சியுமே!

இவற்றைக் காட்டியே மக்களின் அறிவை, சிந்தனையை மழுங்கடிக்கின்றது அரசு!

அண்மைக் காலங்களில் இந்தியா, ஏதோ நேரு வழிமுறையினர்க்கே சொந்தம் போன்று, அது பிளவுப் பட்டுவிடக் கூடாது எனக் கண்ணும் கருத்துமாக காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு, தம் படை வலிமையாலும், மதம், இழிவான கலைகள், தொலைக்காட்சி இவற்றை வைத்துக் கொண்டு மக்கள் அறிவை, சிந்தனைகளை மழுங்கடித்துவிட்டு, மக்கள் பணங்களைச் சுரண்டி ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறது நடுவண் அரசு.

இங்கு இருக்கின்ற முதலாளிகளிடமிருந்தும், வெளிநாட்டு வல்லாளுமை ஆட்சியாளர்களின் முதலீட்டுக்கு வழி அமைத்துத் தருவதின் வழியாகவும் ஏராளமான கோடிகளைத் தம் வயிற்றில் நிரப்பிக் கொண்டிருக்கிற நடுவண் அரசு - இந்திய ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறதாம்!

இந்திய மக்கள் அனைவரும் ஒருவரே - என ஒற்றுமைப் பாடிக் கொண்டிருக்கிற நடுவண் அரசு, உலக முதலாளிய நாடுகளுடன் இணைந்து கூட்டுத் தொழிலகங்களை நிறுவி, அதன்வழி வருகின்ற கோடிக் கணக்கான உருவாக்களை, அம் முதலாளிய நாடுகளிடம் ஒப்படைத்து விட்டு, எஞ்சியதைப் பங்கு போட்டுத் தின்னும் சுரண்டல் நரிக் கூட்டங்கள் இந்த நாட்டின் ஒற்றுமையைக் காக்கின்றனவாம்.

எதற்கு ஒற்றுமை!

இந்தியா என்ற பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நிலத்தை ஒன்றாக வைத்திருந்தால், சுரண்டுவதற்கு எளிமையாக இருக்கும் என்பதற்காக, இந்தியா ஒரே தேசம் எனப்பேசும் இத் திருடர்களுக்கு, உலகமே ஒரே குடையின் கீழ் வர வேண்டும் என, 'அனைத்துலகியம்' (சர்வ தேசியம்) இவர்கள் கோணத்தில் பிறந்து விட்டால்கூட, உலகம் முழுமையும், சுரண்டுவதற்கு இன்னும் வாய்ப்பாகத்தான் அமையும்.

எப்படி இந்தியத் தேசிய இனங்களை ஒன்றிணைப்பது!

எனவே, எப்படியேனும் இந்தியாவில் உள்ள தேசிய இனங்களை இணைத்தே வைத்திருக்கவேண்டும் எனும் வெறியில்,

1. தம் படை வலிமையின் மூலம் மக்களை அச்சுறுத்தி பிரிவினை பேசுவது குற்றம் என்றும் (இவர்கள் கொள்ளை அடிப்பதுபோல் அல்லாமல் இது) கொலைக்குற்றம் எனக் காட்டி மிரட்டுவதும், அப் போராளிகளை அழிப்பதும்,
2. அண்டை நாடு, பாக்கித்தான் தம்மீது ஏதோ போர் தொடுக்கப் போவதாய்க் காரணம் காட்டி (உண்மையில் அப் பாக்கித்தான் நாட்டோடு உள்முகமாகக் கூடிக் கொண்டு) இவ் வேழை மக்களை அச்சுறுத்தி இந்தியா ஒன்றாக இருந்தால்தான் அதை எதிர்கொள்ள முடியும் என (அந்தக் காலத்தில் சீனப் போருக்கு அஞ்சி இந்தியா என்று தேசியம் பேசிய அண்ணாத்துரை போன்று) நரிக்கூச்சல் இடுவதும்,
3. "தம்முடைய பழைமை நிலைக்கு எதிராகக் கும்பமேளா போன்றவற்றைத் தடுக்க அரசு எண்ணிப் பார்க்கவும் முடியாது" என்று ஊளையிட்ட இந்தியத் தலைமை அமைச்சர் - மதம் எந்த அளவு மூட நம்பிக்கைகளை வளர்க்க முடியுமோ அத்தனையையும் செய்யவேண்டும் எனக் கூறுவதோடு உலக அமைதிக்காக வேள்வி செய்யும் கள்ளக் கடத்தல்காரர்கள், திருட்டுப்பணம் அடிக்கும் கொள்ளைக்காரர்களையெல்லாம், மதம் என்னும் செம்போர்வையில் மூடி அதற்குத் தாங்களே நெடு மரமாய் வந்து தலைமை தாங்குவதும் எப்படியேனும் அவர்கள் தொடர்ந்துகொள்ளையடித்துக் கொண்டிருக்க, இந்தியா ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்பதும்,
4. இக்கால இளைஞர்களுக்குத் திரைப்படம் என்ற ஒன்றைத் தவிரவும், முதியவர்களுக்கு இந்தியக் கலைக்கலவை நடுவங்களை ஏற்படுத்தி அவர்களை அதில் மூழ்கடிப்பதும் தவிர எதுபற்றியும் சிந்திக்கவிடாமல் செய்வது நடுவண் அரசின் தலையாயப் பணியாக உள்ளது
திரைப்படத் துறையை வேண்டுமென்றே மிகவும் வளர்த்தெடுப்பதும், அதில் விளையாட்டு என்ற பெயரில் கூத்துகளுக்கும் விளம்பர வண்டிகளாகத் தொலைக்காட்சி, வானொலிகளை இயக்குவதுமே இம் முதலாளியக் கொடுநெறிகளின் செயல்களாகவும் போய்விட்டன [உலகில்வேறு எந்த நாடும் திரைப்படத்திற்கோ, நடிகர்களுக்கோ இவ்வகை முகாமையைத் தரவில்லை அதையும் இங்குக் காணவேண்டும்].
5. ஒரு நாட்டின் தலைவன் அந்த நாட்டைச் சுற்றிப் பார்ப்பதே அந்த நாட்டு மக்களின் குறைகளைக் கேட்பதே இவ் விந்தியாவில் வியப்பானது! எனவே, அதையெல்லாம் படம் பிடித்துக்காட்டி, தலைமை அமைச்சரை ஒரு நடிகராக(Stunt Actor)க் காட்டுவதே இந் நாட்டுத் தொலைக் காட்சியின் பயனாக உள்ளது.

இங்கு மேற்காட்டிய காரணங்கள் இந்தியா

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம் பார்க்க)

கழக முதல்வரின் 2-ஆவது மலேசியச் சுற்றுச்செலவு!

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வரும், இக்கால் தமிழின விடிவு நோக்கிப் போர் முரசு கொட்டும் விடுதலை வேழங்களின் தலைமை வேழமும், தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களின் ஆசிரியருமாகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், கடந்த விடை க, (15–5–1986) வியாழக்கிழமை அன்று மலேசியச் சுற்றுச்செலவை மேற்கொண்டார்கள். ஒரு திங்கள் அளவிலான நிகழ்ச்சி ஏற்பாடுகளில் கலந்து கொள்ளச்சென்ற ஐயா அவர்கள், அன்று பகல் 12-05 மணி அளவில், வானூர்தி வழி பினங்கு வானூர்தி நிலையத்திற்குச் சென்றார்கள்.

இதற்கு முன்பாகவே கழக முதல்வர் பாவலரேறு அவர்கள், 74-ஆம் ஆண்டில் சிங்கை மலையகத்திற்கும், 78-ஆம் ஆண்டில் இலங்கைக்கும், 81-ஆம் ஆண்டில் அந்தமானிற்கும், 83-ஆம் ஆண்டில் ஐரோப்பாவிற்கும் சென்று தமிழின அடிமைத் தனங்களை விளக்கும் வகையில், ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அவ்வுலகங்களுக்குச் சென்றதற்குப் பின், மலையகத்திற்கு இரண்டாம் முறையாக இச் செலவை மேற்கொண்டார்கள்.

கடந்த ஐந்து திங்களாகவே ஆசிரியர் அவர்களுக்கு நுழைவுச்சீட்டு (Visa) கூட்டங்களில் கலந்து கொள்வதற்கென கிடைக்கப் பெறுமையால் அவர்களின் சுற்றுச்செலவு தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வந்தது. மலேசியத் தமிழ் நெறிக் கழகத் தலைவரும், உரத் தமிழ்த் தொண்டருமாகிய திரு. திருமாலன் அவர்களின் அரும் முயற்சிக்குப் பின்னர், நுழைவுச் சீட்டு கிடைத்தவுடன், ஆசிரியர் அவர்கள் புறப்பட அணியமாகி விட்டதால், முன்கூட்டியே எவருக்கும் இச்செய்தியைத் தெரிவிக்க இயலாமல் போய்விட்டது.

இருப்பினும், 'திராவிடர் சமயம்' இதழாசிரியர் திரு. மு. தெய்வநாயகம், சொல்லாய்வறிஞர் ப. அருளி, திரு. அரசத்தொகையன், திரு. குழந்தை ஈகவரசன், திரு. இளமாறன் (தம் குடும்பத்தவருடனும்), திரு. ஆகுன்றன், திரு. பொழிலன் ஆகியோரும் ஆசிரியர் அவர்களை வழி அனுப்பி வைத்தனர். பாவலர். திரு. இளஞ்சித்திரன் திருவாட்டி. தாயம்மாள்-அறவாணன் ஆகியோர்கள் காலம் கடந்து வந்ததனால், ஆசிரியரைக் காண இயலாமல் வருந்திச்சென்றனர்.

மலேசிய நேரப்படி ஆசிரியர் அவர்கள், மாலை 6-30 மணி அளவிற்குப் 'பினங்கு' வானூர்தி நிலையம் சென்றடைந்தார்கள். அங்கு அவர்களுக்குச் சிறந்த வரவேற்பு, வானூர்தி நிலையத்தில் கொடுக்கப்பெற்றது. விடுதலை வேட்கையோடு அங்காந்தத் திரியும் இந்த இழி தமிழினத்தின் விடுதலைப் போருக்கு இச் சுற்றுச்செலவு பயனுடையதாக அமையவேண்டி நிற்கிறோம். —அமைச்சர்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

பாவலரேறு அவர்களைத் தூய தமிழ் நெஞ்சங்கள்

வாழ்த்தி வழியனுப்புகின்றன!

1. மாபெரும் வெற்றி பெறுக!

0 பாவலரேறு அவர்கட்கு,

இனிய தமிழ்நெஞ்சம் நலம் நாடுகின்றது... தங்களது இரண்டாவது மலேசியச்செலவு மாபெரும் வெற்றிபெற எல்லாம் வல்ல இறைப் பேரருளை வணங்குகிறேன்.

—சுப. இளவழகன், கோவை-2.

2. வரலாற்றில் பொன்னெழுத்துகள்!

0 பேரன்பின் இனிய ஐயா அவர்களுக்கு வணக்கத்துடன் எழுதிக்கொண்டது:

தங்களுடைய மலேசியச் சுற்றுச் செலவுச்செய்தி மிக்க மகிழ்ச்சி தருகிறது.

நல்ல மரத்தில் புல்லுருவிபோல் நல்ல நிலத்தில் விளைச்சலிடையே உள்ள நெல்மிரட்டியும் களைகளையும் போல், நம்மினத்திடையே, நம் மொழியிடையே மாறுதல் தெரியாமல் மண்டிக் கிடக்கும் மொழி, இன, நாட்டுப் பகைவர்களை நம் இனத்திற்குக் கண்டு காட்டக்கூடிய கடப்பாடு உடைய தங்களின் இச் சுற்றுச்செலவு வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படுவதை எவராலும் தவிர்க்கமுடியாது.

தங்களின் இச் சுற்றுச்செலவு மகிழ்வாக அமையவும், சிறந்த பெருமை பெறவும், நீண்ட வரலாறு படைக்கவும் எல்லாம் வல்ல ஆதி பகவனை மனம் உருகி வணங்குகின்றேன்.

அன்புடன், —நாரா. மகிழ்நன், திருச்சி-14

3. தமிழ்த் திருப்பணி செய்க!

0 தமிழ்ப் பொழில், அன்போடு வாழ்த்துகிறேன்.

ஐயா அவர்கள் மேலை-கீழை முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று தமிழ் நெறி பரப்புதல், உலகிற்கும் குறிப்பாகத் தமிழ் இனத்திற்கும் நலம் பயக்கும் என்று நிறை நெஞ்சோடு நம்புகிறேன். அவர்கள் திருப்பணி செய்து, தமிழர் வாழ்வுக்கு மேன்மை தேடுவார்கள்.

எல்லா நலமும் நீடிய வாழ்வும் பெற்றுத் தம் குடியோடு நெடிது வாழ இறைப்பொருளை மன, மொழி, மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

தங்களன்புள்ள,

— புலவர். ச. சிவசங்கு, திருத்தொண்டநல்லூர்.

4. வழிச்செலவு மிகவும் பயன் தரும்!

0 அன்புள்ள தம்பி பொழிலுக்கு. வணக்கம் பல.

ஐயா அவர்களின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணச்செய்தி அறிந்தேன் மிகவும் மகிழ்ச்சி! உலகத் தமிழர்களின் ஒன்றுபட்ட கட்டமைப்புக்கும், நமது பண்பாடு, பழந்தமிழர் வரலாறு, உலகப் பொதுநூல் திருக்குறள்-ஆகியவை அயலகத் தமிழர் நெஞ்சிலே பதியவும், நிலைவுறுத்திக் கொள்ளவும், ஐயா அவர்களின் சுற்றுச் செலவு மிகவும் பயன்தரும். அவர்களின் சுற்றுச்செலவு பெரு வெற்றியடைய விரும்புகிறேன். அன்புடன்,

—செ. வ. புகழேந்தி, கள்ளக்குறிச்சி.

5. வெற்றிக் கனி பழுக்கட்டும்!

0 மொழியின் விழியாகவும், இனத்தின் விழியாகவும், நாட்டின் மூச்சாகவும் உழைக்கும் பாவலரேறு ஐயா, வண்டமிழ் வணக்கம். தங்களின் இரண்டாவது மலேசியச் சுற்றுச் செலவுச்செய்தியறிந்தேன்; மட்டற்ற மகிழ்ச்சி.

உலக உருண்டையின் மேல் ஒவ்வொரு வகையில் உறங்கிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு, ஓவியம் கண்டு களிப்படைவதைப் போல் சுற்றுச் செலவை மேற்கொள்ளும் மக்கள் பலருக்கிடையில், மொழி, இனம் நாடு மூன்றின் விடுதலைக்காக உரமேற்றி வரச் செல்லும் தங்களின் மலேசியச் சுற்றுச்செலவு மாறுபட்டதும்-வேறுபட்டதுமாகும்.

தங்களின் மலேசியச் சுற்றுச் செலவு, மானம் மிக்க மறத்தமிழர்களை உசுப்பிவிடவும், மாண்புமிக்க இன விடுதலையை மீட்டெடுக்கவும், மாந்தநேய ஒருமைப்பாடு மதர்த்தெழவும் வழிவகுக்கும் என்பது உறுதி எனினும், அது வெற்றிக் கனியாகப் பழுத்து விளைவை முழுமையாகப் பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்குத் துணையாகச் செயல் புரிதல் வேண்டுமென மெய்ப்பொருள் தலைவனின் மேலான திருவடிகளை வணங்குகின்றேன்.

சுற்றுச்செலவு மகிழ்வுடன் தொடங்கி மன நிறைவுடன் முடிவடைவதோடு, எதிர்கால உழைக்கும் மக்களின் புரட்சிப் போராட்டத்திற்கு உரமாக அமையவேண்டும் என வணங்கி வாழ்த்துகின்றேன்.

வாழ்க பல்லாண்டு! வளர்க தமிழால்!

இவண்: தங்கள் அன்புத் தம்பி,

— புலவர். இராசு தமிழ்வேந்தன் எழில்,
திருப்பாதிரிப்புலியூர்.

6. தமிழின ஒருங்கிணைப்பும், மேம்பாடும் அமையட்டும்!

0 மதிப்பிற்குரிய அய்யா!

வணக்கம். தாங்கள் மலையகச் செலவு மேற்கொள்ளுவதை அறிந்து மகிழ்கிறோம். தங்கள் பயணம் தமிழின ஒருங்கிணைப்பிற்கும், மேம்பாட்டிற்கும் வழி வகுத்திட வெற்றியுடன் அமைய வாழ்த்துகிறோம். —'தென்மொழி' அன்பர்கள், பல்லடம்.

7. நல்ல வண்ணமும், முழு நலமும்...!

0 அன்பின் இனிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் மலேசியச் செலவு மேற்கொள்ள இருப்பது அறிய மிக மிக மகிழ்ந்தோம்...! எங்களிடம் மாறாத அன்பு காட்டும் தங்களின் சான்றாண்மைக்கும் உயர்தனிப் பண்புக்கும் தலைவணங்குகிறோம்.

தங்கள் பயணம் நல்ல வண்ணம் அமைந்து தாங்கள் முழு நலத்தோடு இருக்க வேண்டுமென மனமார விரும்புகின்றோம், என்றும் அன்புடன்,

—இரா. கழராம்பன், திண்டுக்கல்

8. தமிழ்க்கும், தமிழர்க்கும் ஆக்கம் விளையும்!

0 உயர்திரு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு:

தாங்கள் இரண்டாம் முறை மலேசியாவிற்குச் சுற்றுப் பயணம் செல்வதறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். தங்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் அங்குள்ள தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் பெரிதும் ஆக்கம் விளைவிக்கும் என்பதில் ஐயம் இல்லை. தங்கள் சுற்றுப்பயணம் இலங்கைத் தமிழர்களுக்கு விரைவில் விடிவு ஏற்படும்வகையில், அங்குள்ள தமிழர்களிடையே ஊக்கமும்-உதவியும் கிடைக்குமாயின் மிகுந்த பயன் விளைவிக்கும். தங்களின் வெளிநாட்டுப் பயணம் வெற்றியுடன், உலகத் தமிழர் அனைவருக்கும் பயன்படும் வகையில் இனிதே முடிந்து நலமுடன் திரும்பிவர விழைகிறேன்.

— கு. பழனியப்பன், திருச்சி-1.

9. உலகத் தமிழினத்தின் உயர்வுக்குக் குரல்!

0 தனித்தமிழ் அரிமா பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்.

வாழி பல்லூழி! அன்னைத்தமிழின் இன்னலுறும் சிறப்பு நலன்களை அயலகம் வாழ் தமிழரிடம் அருமையாய் எடுத்துரைக்க, இரண்டாம் முறையாக மலையகச் சுற்றுச்செலவு மேற்கொள்வதை அறிந்து பெரிதும் மகிழ்வும்-பெருமிதமும் அடைகிறேன்.

எத்தனையோ பணிச் சுமைகட்கும், விளையுழத்தல்கட்கும், எதிர்ப்புகட்கும் இடையறாத் தொல்லைகட்குமிடையே செந்தமிழ்த் தொண்டு சிறக்க ஆற்றி வரும் தாங்கள் உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழினத்தின் உயர்வுக்குக் குரலெழுப்பவும், உணர்வூட்டவும், இழந்த பெருமையை மீட்கவும், எழுச்சியூட்டவும் தங்கட்கு இந்தச் சுற்றுச் செலவு வாய்ப்பாக அமையட்டும். 'எண்ணியாங்கு பயன் எய்தட்டும்' என்று நெஞ்சார, வாயார என் நல் வாழ்த்துகளைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் சுற்றுச் செலவு எல்லா வகையிலும் இனிய வெற்றியே கிட்டுமாறு சென்று, முழு நலத்துடன் இனிய பயன் விளைத்து மீளுமாறு வாழ்த்தி மகிழ்கிறேன். நேரில் வந்து வாழ்த்த விழைந்தும் இயலவில்லை பொறுத்தருள்க!

வாழ்க பல்லாண்டு! வளர்க தங்கள் தமிழ்த் தொண்டு! வெல்க தங்கள் சுற்றுச்செலவு!!!

அன்பன்,

— புலவர். திருக்குறள் நாவை சிவம், மணப்பாறை.

10. தமக்கு நிகரிலாத் தமிழ்த் தவ வாழ்வு!

0 பெருமதிப்பிற்குரிய, பேரன்புசெழுமிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

தாங்கள் இரண்டாவது மலேசியச் சுற்றுச் செலவு மேற்கொள்ள விருக்கும் செய்தியை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தங்களின் சுற்றுச் செலவு, தமிழும்-தமிழினமும் ஏற்றம் பெறுவதற்கே உரியதாய் இருக்கும் என்பது ஒருதலை.

தமிழ் நலமே தங்கள் நலம் என்று கருதித் தமக்கு நிகரில்லாத் தமிழ்த் தவ வாழ்வு வாழும் தாங்கள் மேற்கொள்ள விருக்கும் இந்தச் சுற்றுச் செலவில் பலப்பல அரும்பெரும் பொருள்கள் பற்றிய அரிய சொற்பொழிவுகள் ஆற்றவுள்ளீர்கள் என்பதை அறிந்து அளவிலா மகிழ்வெய்துகின்றேன். கடல் கடந்த நாட்டில் வாழும் நந்தமிழ்ப் பெருங்குடி மக்கட்குத் தங்களின் பொழிவுகள் புத்துணர்வும், புது வாழ்வும் தந்து அவர்களைத் தமிழ்ப்பற்றிலும், தமிழின உணர்விலும் ஒளி விளங்கச் செய்யும் என்று உறுதியாய் நம்புகின்றேன்.

தாங்கள் சுற்றுச் செலவின் போழ்து சிறந்த உடல் நலமும் சீரிய மனமகிழ்வும் கொண்டு, தங்களின் தனிப்பெரும் குறிக்கோளாய் தமிழும், தமிழினமும் உயர, தாங்கள் விரும்பும் வண்ணம் தக்க பணிகள் பலவற்றைத் திறமுடன் ஆற்றி, முழு நலத்துடன் தாயகம் வந்தெய்தத் தங்கட்கு எல்லா நலன்களும் தந்தருளுமாறு நம் தண்டமிழ் அன்னையை மன, மொழி, மெய்களால் வணங்கி வேண்டுகின்றேன். வாழிய தாங்கள்! வெல்க தங்கள் சுற்றுச்செலவு!! இங்ஙனம், என்றும் தங்களன்புள்ள,

—புலவர். பொதிகைச் செல்வன், பவானி.

11. தன்னலமில்லாத் தமிழ்ப் பெருஞ்செலவு!

0 பேரன்புக்குரிய பெருந்தமிழ் அறிஞ! வணக்கம்.

தங்களின் மலையகச் செலவுச் செய்தி கண்டு பெரு மகிழ்வுற்றேன்.

தங்களின் தன்னலமில்லாத் தமிழ்ப் பெருஞ்செலவு இனிதே தொடர்ந்து, எல்லா நிலைகளிலும் ஏற்றம் பெற்று நந்தமிழ்த் தாய்க்கு நற்புகழ் அளிக்கும் என்ற உணர்வார்ந்த என் நெஞ்சத்தெழும் எண்ணப் பெருக்கை எழுத இயலா நிலையில் உள்ளேன்.

மலையகச் செலவு மாண்புற வேண்டுமென்பது என் பெரு விருப்பம் புகழொடு திரும்பும் நாளை என் கண்கள் பூக்கக்காண விழைகின்றேன். இவண்,

—தமிழியக்கன், புதுச்சேரி-5.

12. பயனுள்ளதாக அமையும்!

0 தோழருக்கு, அன்புடன்.

நீங்கள் இரண்டாவது முறையாக மலேசியச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளும் செய்தியறிந்து மகிழ்ச்சி அடைந்தோம். உங்கள் பயணம் அங்குள்ள தமிழருக்கும், பிறருக்கும் பயனுள்ளதாக அமையும் என்பது எங்கள் நம்பிக்கை.

சென்று வருக; நல்ல தமிழ்ச் செய்திகளைப் பரப்பிடுக. அன்புள்ள,

—முனைவர் சாலை இளந்திரையன்,

— முனைவர் சாலினி இளந்திரையன், சென்னை-88.

13. நிறைவாகவும், மகிழ்வாகவும்!

0 அன்புள்ள ஐயா,

வணக்கம். நலம் நலமே சூழ தமிழன்னையை வேண்டுகின்றேன். தங்களுடைய அயலகச் சுற்றுச் செலவு மிக நிறைவாகவும், மகிழ்வாகவும் அமைய இறைவன் அருள்புரிய வேண்டுகிறேன். அன்பன்,

— பொற்செழியன், வெங்காளூர்-1.

14. உலக அரங்கில் ஒரு தனி மதிப்பு!

0 பேரன்புடையீர், வணக்கம்.

ஐயா அவர்களின் மலேசியச் சுற்றுச்செலவு, உலகத் தமிழின மக்களுக்கு உலக அரங்கில் ஒரு தனி மதிப்பை ஏற்படுத்தும் என உறுதியாக நம்புகிறேன். செலவு பயனுள்ள வழியில் அமைய நெஞ்ச நிறைவோடு வாழ்த்துகின்றேன். அன்புடன்,

— கு. தமிழப்பன், குறுக்கபாளையம் (திருப்பூர்)

15, வெற்றி காண்பீர்கள்!

0 அன்புமிக்க ஐயா,

வணக்கம். கிழக்காசிய நாடுகளின் தங்களுடைய சுற்றுச் செலவில் வெற்றி காண்பீர்கள் என நம்புகின்றேன். அன்புமிக்க,

—அதியமான், தாழையூத்து

16. எல்லாவகையிலும் சிறப்புற...!

0 பேரன்புக்குரியீர், வணக்கம்.

பாவலரேறு அவர்களின் மலேசியச் செலவு குறித்துப் பெரு மகிழ்வு அடைகிறேன். அவர்களின் வானூர்திப் பயணம் இனிதாக அமையவும், சுற்றுச் செலவு எல்லா வகையிலும் சிறப்பாக நடந்தேறவும் திருவருள் துணைபுரிய வேண்டுமென விழைகிறேன்,

தங்களன்பு மறவா,

—இரா. நெடுமாறன், மயிலாடுதுறை

17. நலமுடன் சென்று வெற்றியுடன் திரும்புக!

0 பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு.

வணக்கம். தங்களின் அயலகச் சுற்றுச் செலவு பற்றி அறிந்தேன். பெரு மகிழ்வு அடைந்தேன்.

தங்கள் சுற்றுச் செலவு உலகத் தமிழர் அனைவருக்கும் நற்பயன் காட்டும் என்பது திண்ணம்.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம் பார்க்க)

உலகத் தமிழரே ஒன்றுபடுங்கள்!

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களுக்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன். மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3] இதழ் எண்: 72 (25-5 1986) [பகுதி- 114

ஓர் அறிவிப்பு!

ஆசிரியர் வெளிநாடு சென்றமையால், ஆசிரியவுரை அடுத்த இதழில் வெளிவரும்.

— அமைச்சர்.

நினைவுக் கலை ஏந்தல்
திருக்குறள் இராமையனார் மறைவு!

"புலவர். இராமையனார் நிரம்பக் கற்றவர்; ஆழப் படித்தவர்; கல்விப் புலத்தின் அகற்சியைக் கண்டவர்; தமிழ் மொழி மட்டுமே அவர்க்குத் தெரியும் என்றாலும், ஏறத்தாழத் தமிழ் நூல்கள் அனைத்தையும் ஒரு சேர அறிந்தவர். அவற்றுள் பெரும்பாலான இலக்கண இலக்கிய நூற்களைக் கரைத்துக் குடித்தவர். அவற்றுள் எந்தப் பகுதியையும், எப்பொழுதும் தங்கு தடையின்றி மளமள வென்று கூறும் ஆற்றல் உடையவர். அவருடைய நினைவாற்றல் ஒரு யானையைப் போன்றது; அவருடைய தோற்றமும் அத்தகையதே!"

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

நினைவுக் கலை ஏந்தலும், பதின்கவனகரும், தமிழக அரசின் அரசவைப் புலவர்களுள் ஒருவரும், உண்மைத் தனித்தமிழ் ஆர்வலரும் ஆகிய புலவர். திரு இராமையனார் அவர்கள், கடந்த விடைத் திங்கள் 4 ஆம் பக்கல் (18-5-1986) அன்று தம் சொந்த ஊரான கோயில்பட்டியில் மறைவுற்றார் எனும் செய்தி அறிந்து உளம் நொந்தோம்.

பழந் தமிழ்ப் பேரினத்தில் செழித்தோங்கி யிருந்த கலைகள் பலவற்றுள்ளும் மிகவும் அருகியிருந்த இவ் வகை எண்நினைவாற்றல் (அட்டவதானம்), பன் நினைவாற்றல் (தசாவதானம்), பற்பன் நினைவாற்றல் (சதாவதானம்)களின் பெருமை இக்கால் மிகவும் அருகித் தோன்றக்கூடிய நிலையில், இவ் இருபதாம் நூற்றாண்டின் வியத்தகு புலவர் இராமையா அவர்கள் அவ் வருங்கலை வாய்க்கப் பெற்றவராய்த் திகழ்ந்து, மறைந்து போனது தமிழ்க் கலைத் துறைக்கே பேரிழப்பாகும்.

கி-பி. 1920, செப்டம்பர் திங்கள் 24 ஆம் பக்கல் பிறந்த அப் பெரும் புலவர், ஐந்தாம் வகுப்பு வரையே பள்ளிக் கல்வி கற்றிருந்தாலும், தமிழ் இலக்கியங்களைக் கரைத்துக் குடித்திருந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு 9 மாத காலம் கடுங்காவல் தண்டனை ஏற்று, பின் தம் இருபத்து இரண்டாம் அகவையில் திருமணம் செய்துகொண்டார். அப் பெரும்புலவருக்கு மூன்று ஆண் மக்களும், மூன்று பெண் மக்களும் உள்ளனர்.

அன்னவரின் அருந் தமிழ் நினைவாற்றலைக் கண்டு, அவர் தம் வாழ்வு இறுதிவரை வாழ்வது, இவ்வரசு அவரைப் புரந்தது பாராட்டிற்குரியது.

அவரை இழந்து அல்லலுறும் அவரின் குடும்பத்தார்க்கும், தூய தமிழ் நெஞ்சங்கட்கும் நம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவர் தம் சிறப்பு, அக் கலையை எண்ணுமட்டும் எண்ணி மகிழத்தக்கது.

இவ்வருந் தமிழ் இருக்குமட்டில் அவர்தம் புகழ் நின்று நிலவுமாக!

(முதற் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதற்காக இந்தியக் கொடுநெறி அரசு மேற்கொள்ளும் முயற்சிகளேயல்லாமல் அந் நாடு ஒன்றாக இயக்கவேண்டும் என்பது எதற்கு என்ற காரணங்கள் அல்ல! அங்ஙனம் ஒன்றாக இருப்பதினால் ஆளும் கொடு நெறிகள் (சர்வாதிகாரிகள்) எந்த அளவு கொழுத்துப் போகின்றன என்பது நீண்டபட்டியலைக்கொண்டது.

இப்படியெல்லாம் செய்து எப்படியேனும் இந்தியா ஒன்றாகவே இருக்கக் காலாளை அடித்துக்கொண்டிருக்கும் இச் சுரண்டல்காரர்களின் இந்திய ஆட்சி அமைப்பு என்றைக்குத் தகர்க்கப் பெறுகிறதோ அன்றைக்குத்தான் இவ்வேழை மக்களின் விடிவு காலம்!

எனவே இவ் விந்தியக் கொடுநெறியைத் தகர்க்க, இவ்வாளும் அரசின் சுரண்டல்கள், ஏய்ப்புகள், ஏமாற்றுகள் இவற்றை முழுமையாக விளங்கிக்கொள்வதோடு, இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தும் முழுமையான விடுதலைக்குட்பட்டு வாழ்வதிலேயே இச் சிக்கல் தீர்க்கப்பெறும் எனும் தெளிவில் நாம் அகவேட்டகத்தை முதலில் அணியப்படுத்திக் கொள்வோமாக!

உ. த. மு. க உறவு மடல் :

சிறுபான்மை அச்சம்!

"தாசுமகாலைக் கட்டியவர் யார்?"

"கொத்தனார்!"

ஆசிரியர்க்கு 'சாசகான்' என்ற விடை தரவில்லையே! என்ற கவலை,

குழுக்கவியலார்க்குக் 'கொத்தனார்' என்ற விடையில் ஒரு பூரிப்பு;

ஆனால், கொத்தனார்...சிற்றாட்கள், மற்றுமுள்ள பல்வேறு வேலைப் பிரிவினர்களுடன், அரசின் ஆணையும், அரசும் சேர்ந்து கட்டியதென்ற முழுமையான விடையை நோக்கியுள்ள 'குழுக்கவியல் அறிஞன்' மேலும் செயல்படுகின்றான்.

முந்திய விடையின் ஆளும் கணச் சிந்தனையும், பிந்திய விடையின் எழுச்சியையும் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும்.

இன்றுள்ள 'அரசு' சிறுபான்மையாகவுள்ள நிலக்கிழார், தொழில் வேந்தர்களின் நலனுக்காக உள்ளது. பெரும்பான்மை பற்றி அக்கறையுள்ளதாகக் காட்டிக் கொள்கின்றது.

இச் சிறுபான்மையரான சுரண்டும் கும்பல் மக்களின் எழுச்சி கண்டு மருள்வதுண்டு. இம் மருட்சியை வேகப்படுத்தி அக் கும்பலை வீழ்த்துவது ஒரு நாள் உறுதிப்படும்!

அந்தச் 'சிறுபான்மை' விடுத்து, மற்றுமொரு 'சிறுபான்மை' உள்ளது. இது, பிரிட்டிசுக்காரர்கள் அச்சப்பட்டு 'விட்டுக்கொடுத்த' விடுதலைக்கு முன்னர் 'இடைக்கால அரசு' வேளையில், தங்களின் எச்சங்களை எதிர்காலத்திலும் 'மேலே தூக்கி' நிறுத்த விரும்பினர். அப்போது, 'ஆங்கில - இந்தியர்' சிறுபான்மை நலனைப் பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டங்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. இச் சட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு, 'மொழி', சாதி, மதங்களின் பேரில் 'மேற்படி ஆளும் சுரண்டும் கும்பல்' நலனைக் காக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

தன்னுரிமையும், விடுதலை உணர்வும் வாய்க்கப் பெறாத மக்களிடம் அச்சம் பரப்பப்படுவதும், அதன் மூலம் 'மேல் தட்டுகள்' கும்மாளம் கொட்டுவதும் தொடர்கின்றது. இப்படிப்பட்ட 'சிறுபான்மை' பேரில் அடிக்கப்படும் கொள்ளைகளுக்கு எதிராகக் கொடி தூக்கி நிற்பதில் உ. த. மு. க. தன்னை அணியப்படுத்தி வருகின்றது.

இப்போது 'சிறுபான்மை'யினர் எனப்படும் தமிழ்நாட்டுத் தமிழின மக்களைப்பற்றி ஒரு துளி சிந்திப்போம்...!

சௌராட்டிர மொழி பேசுபவர், தெலுங்கு பேசுபவர் தமிழ்நாட்டுப் பகுதிகளில் வாழ்கின்றார்கள். இவர்கள் தமிழின மக்களே. ஆயின், இவர்களின் அச்சத்தையும், அறியாமையையும் பயன்படுத்தித் தவறான-பிராமணியப் பண்பாட்டு, மொழி வழக்கிற்கு உயிர் கொடுத்து விடலாம் எனக் கருதிச் செயல்படுகின்றனர்.

சௌராட்டிர பிராமணாள் - விசுவகர்ம பிராமணாள் தெருக்களைப் பார்க்கிறோம். இவை சௌராட்டிர மொழி பேசும் சௌராட்டிரர், தெலுங்கு மொழி பேசும் பொற்கொல்லர் வாழும் தெருக்களாகும்.

இவர்களின் மொழி-பேச்சு தங்களுக்குள் என்றாலும், தமிழிலேயே மற்றவர்களுடன் உறவு கொண்டிருக்கிறார்கள். கல்வி, கணக்கெல்லாம் தமிழே. இவர்களுக்குள்ள மொழியின் வரி வடிவம் இவர்கள் அறியாத ஒன்றாகவே உள்ளது.

என்றாலும், தங்களைப் 'பிராமணாள்' என்றும் 'பிரம்மா'வின் பரம்பரை என்று கருதிக் கொள்கிறார்கள் அறியாமையால், சமசுக்கிருதம் 'புராணம்' அனைத்தையும் 'தங்கள் மரபுரிமை' போலக் கருதும்படி செய்கின்றனர். இதற்கு நம்மிடையே உள்ள 'இந்து' மத உணர்வும் சாதி அமைப்பும் துணைபுரிகின்றன. தமிழின ஒற்றுமையைக் குலைக்க முயலும் இவர்கள், ஒன்று, பிராமணர்களின் மேம்பட்ட பிரிவு என்றோ, அல்லது அவர்களுக்கு ஒப்பானவர்கள் என்றோ காட்டிக் கொள்கிறார்கள். உண்மையில், 'தமிழினம்' என்ற கருத்துக்கும் மாறுபட்டுச் சாதி உணர்வில் தலை தூக்கி நிற்கின்றனர், இதற்கு அரசு தரும் சலுகைகளும், தூண்டுதல்களுமே முதாமையாகும்!

அச்சங்களை விதைத்து, வசதிகளை-ஏந்துகளை - வளர்த்துக் கொள்ளும் ஆளும் கும்பல்களை இனங்கண்டு தமிழினம் ஒன்றுபட்டு நின்று முன்னேற வேண்டும்.

— பறம்பை அறிவன்.

ஈழத் நண்பனுக்கு!

(பாலத்தீனியப் பா)

பாவலர். பவுசி அல் அசுமார்.

[சிங்கள நண்பன் ஒருவனுக்கு இலங்கை மலையகத் தமிழன் ஒருவன் கூறுவதுபோல் உள்ளது]

"இயலாததை என்னிடம் கேளாதே!

விண்மீன்களைக் கொண்டுவரும்படி
சூரியனிடம் நடந்துசெல்லும்படி
என்னிடம் கேளாதே!

கடலை வற்றவைக்கும்படி
பகலொளியைத் துடைத்துவிடும்படி
என்னைக் கேளாதே!

என் கண்களை
என் காதலை
என் இளமை நினைவுகளை
அழித்துவிடும்படி என்னைக் கேளாதே!
நான் ஒரு வெறும் மாந்தன்!

ஓர் ஒலிவ மரத்தின்கீழ்
நான் வளர்ந்தேன்!
என் தோட்டத்துக் கனிகளை
நான் உண்டேன்!
முந்திரிக் காடுகளில்
நான் பழச்சாறு குடித்தேன்!
பள்ளத்தாக்குகளில் கன்னிப் பழங்களை
அதிகம் அதிகம்
நான் சுவை பார்த்தேன்!

என் செவிகளில்
வானம்பாடிகள் பாடல் இசைத்தன!
நகரங்களிலும் வயல்களிலும்
விசிச்சென்ற விடுதலைக் காற்று
எப்போதும் என்னை சிலிர்ப்புறச் செய்தது!

என் நண்பனே!
என் சொந்த நாட்டினைவிட்டுப்
போகுமாறு
நீ என்னைக் கேட்கமுடியாது!

['பலத்தீனக் கவிதைகள்'
என்னும் நூலிலிருந்து.
தமிழாக்கம்: எம். ஏ. நுஃமான்]

நீங்களும் புலவர்களா?

(உரைவீச்சு)

ஓ!
தமிழாசிரியர்களே! தமிழ்க் காவலர்களே!
சற்றே நில்லுங்கள்! சிறிதே
செவிமடுங்கள்!
தமிழ் கற்றீர்! யாப்புக்கு அணிசேர்த்தீர்
அவை படைத்தீர்! சுவைமிகு
அருந்தமிழ் வளர்த்தீர்(!)
நன்றிகள் கோடி, கோடியாய்க்
குவித்தோம்!
கழிசடை மொழிகள் சில ஓலக்கூச்சலிட்டு
ஒழிந்தான் தமிழனென்று எண்ணிக்
கோலோச்சிட நினைந்த போது,
வீர முழக்கமிட்டு களம்புகுந்த
வெல்லரிமாக்கள் எத்தனை! எத்தனை!
அத்தனையும் உங்கள் உறவுதானே!
யார் மறுப்பார்?
இன்றோ!
அம்மவோ! சொல்லும் தரமில்லையே!
மொழியோ முதுகெலும்பு
முறிந்து கிடக்க!
இனமோ எங்கெனாமோ
அடிபட்டு மிதிபட்டு ஆதரிப்பார்
யாருமற்று!
ஏதிலியாய் இருள் கப்ப.
தமிழ் நாடோ(!)
நடை பிணமாய்க் காலம் கடத்த
மாந்தன் என்று வாழ்கின்றோம் நாமும்!
நீங்கள் இவற்றை யெல்லாம்
அறியவில்லையா!

இல்லை,
அறிய மறுக்கின்றீர்களா? சொல்லுங்கள்!
அன்றோ,
ஆர்த்தெழும் அஞ்சா நெஞ்சங்களை,
ஏந்த மாணவத் தமிழர்களை,
மறத்தமிழர் கூட்டத்தைக் கூட்டி,
நாட்டத்தைக் கண்(டீரே) அவை,
அரத்தத் துளியால் எழுதிய
வரலாற்றுக் காலமன்றோ!
இன்றெங்கே அவர்கள்?
மாய்ந்தனரோ! இல்லை மறைந்தனர்!
எங்கே?
உங்கள் உள்ளத்தின் ஓரத்தின்
உணர்வொடுங்கி, உளம் தளர்ந்துச்
சோழையரில் ஏழையராய்...
ஐயகோ...!
நீங்களெல்லாம் புலவர்களோ?
இல்லையில்லை...
புன்மைகள் நீங்கள்!

—தாரை தமிழ்வென்றி.

அனைத்துலகியம் கட்ட தமிழ்த் தேசத்தை விடுவிப்போம்!

தேசியத் திருடர்களின் கோட்டை சரிகிறது!

அனைத்து அசாம் மாணவர் பேரவை அரசியலில் போட்டியிட்டு ஆட்சியைப் பிடித்திருப்பது மிகவும் பெருமைப்படத்தக்க ஒன்று. பல வகையாலும் தாக்குண்டு கிடந்த அசாம் மக்கள் இவ்வாட்சியிடம் நிறைய எதிர்பார்ப்பர். மிகவும் இளைஞராய் ஆட்சிக் கட்டிலில் அமர்கின்ற திரு. பிரபுல்லகுமார் மகந்தாவின் அரசு மக்களுக்கு அவர்களின் தேவையை எவ்வாறு நிறைவேற்றுகின்றது என்று போகப் போகத்தான் பார்க்க இயலும்.

முதியோரிடம் பட்டறிவு இருக்கும். இளைஞரிடம் அவ்வறிவு அவர்களைவிடக் குறைவு என்றாலும் தூய்மையான எல்லா மக்களுக்கும் ஏற்றதான ஒரு நயன்மை ஆட்சியைத்தான் அமைப்பர். ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து அதன் எழிலை மட்டுமே சுவைக்காது மக்களின் இன்னல்களைக் களைய என்னென்ன உண்டோ அவற்றைத் தீர்த்துவைத்தால் அஃது அவர்க்கு எளிதான ஆட்சியாய் இராது. பெரிய புராணத்தில் கூறியபடி அருமந்த அரசாட்சி அரிதே மற்றெளிதாமோ - என்றபடி மிக மிக அரிதாகிவிடும் இன்றைய நிலை அவ்வாறில்லை. எடுத்த எடுப்பிலேயே மக்களின் நலன்களையெல்லாம் தூர எறிந்துவிட்டு இருக்குமட்டும் அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா என்ற கதைதான் நடக்கிறது. அரசியல் என்பது மிகச்சிறந்த ஊதியம் பெறும் வணிகமாகக் கருதப்படுகின்றது. ஐம்பெருங் குற்றங்களை முதலாக வைத்துச் செய்யப்படும் இந்த வணிகத்தில் மக்களின் நலன்கள் எரிக்கப்படுகின்றன. சில நூறு போட்டால் பலகோடி எடுக்கலாம் என்ற நிலை இன்று தமிழக அரசியலிலும் சரி, இந்திய அரசியலிலும் சரி நடைமுறையாகப் பேசப்படுகிறது.

இந்த நிலையில் மாணவப் பருவத்தை இன்னும் தாண்டாத இளைஞர் அசாமில் ஆட்சியைப் பிடித்திருக்கின்றனர். இந்தி பேசாத மக்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகின்ற நிலையில் இந்தி பேசாத மாநிலங்களில் எல்லாம் அந்தந்த மாநிலக் கட்சிகள் அமைவது காலத்தின் தேவையே. தேசியம் பேசும் திருடர்கள் எத்தனை நாளைக்குத்தான் கூட்டுக் கொள்ளையராக முடியும் என்றாவது ஒரு நாள் வரலாறு அவர்களின் முகத்திரையைக் கிழிக்கத்தானே செய்யும். அப்போதுதான் அவர்களின் திருட்டுத்தனங்கள் ஊருக்கும், உலகுக்கும் தெரியும். உண்மையறிந்த மக்கள்முன் எந்த ஆற்றலும், எதுவும் செய்யமுடியாது என்பதை உலக வரலாறுகள் அப்போதைக்கப்போது நமக்கு உணர்த்திக்கொண்டிருக்கின்றன இங்கு வேண்டுமென்றால் காலம் தாழ்த்தி நடைபெறலாம். எனினும், கட்டாயம் நடந்தே தீரும்.

புரட்டு செய்யும் கூட்டம், ஆட்சியைப் பிடித்தால் ஆட்சி எப்படியும் அமையலாம் புரட்சி திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்டால், அது செம்மையாய் இருக்கும் இல்லையேல், இன்று தெரிவு செய்த மக்கள் நரிபாரை விட, எலியாரே தாழ்வில்லை என்று எண்ணும்படியாய் இருக்கக்கூடாது. அந்த நிலைதான் இன்று தமிழகத்தில் உள்ளது.

இந்தியாவில் முதன் முதலில் மக்கள் கட்சி, மாநிலக் கட்சி ஆட்சி அமைத்தது தமிழகத்தில் தான். எல்லோருக்கும் தமிழகம் முன்னோடி என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. இருப்பினும், தி.மு.க. வால் ஒழுங்கான ஆட்சியை அமைத்துக் கொடுக்க முடியாமற் போனது. ஊழல்கள் மலிந்தன. கட்சித் தலைமை கட்டுப்படுத்தாது போனதும், தன் மக்களையே சுரண்டி வாழும் நிலை வந்தபோது, மக்களிடம் வெறுப்பேற்பட்டது. இதைப் பகைக்கட்சி சரியாகப் பயன்படுத்தி அக்கட்சிக்குள் உட்பூசலை உண்டாக்கி தனி மந்தர் சிலரின் சாய்காலைப் பயன்படுத்தி இன வீழ்ச்சிக்கு வித்திட்டனர்.

இன்று தி.மு.க. குறைகள் இல்லாத ஊழல் அற்ற ஆட்சியைக் கொடுக்க முன் வந்தாலும், பழைய அச்சம் மக்களிடம் அறவே போகவில்லை. ஆதலால், அதனை மறுபடியும் ஆட்சியில் அமர்த்த மறுக்கின்றனர். தி.மு.க.-வில் ஊழல் செய்தவர்களெல்லாம், இன்று பிரிந்த கட்சியில் இருந்தாலும், ஒரேயொரு மாந்தனின் சாய்காலால் அவையெல்லாம் மறைந்து விடுகின்றன.

என்னதான் ஊழல் நடைபெறினும், மக்கள் அவர்களையே தேர்வு செய்கின்றனர். காரணியம் முன்இருந்தோர் மீது கொண்ட வெறுப்பும், இப்போது திரைப்படம்; வெற்றி 'நீர்' ஆகியவற்றில் உள்ள மயக்கம் தான். தமிழகம் இப்போது புதிய தலைமுறையை விரும்புகிறதா? விரும்பலாம். ஆனால், அப்புதிய தலைமுறை எப்படி அமையவேண்டும் என்பதை நாளை வரலாறு நமக்குத் தெளிவாகக் காட்டும்.

இப்போது ஆளும் அ.தி.மு.க.-வும், நாளை தோற்கலாம். அப்போது மக்கள யாரைத் தேர்ந்தெடுப்பர்? ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டோர், மீண்டும் ஆட்சியில் அமர்வது தமிழக அரசியலில் நடக்காது போல்தான் தெரிகிறது. இனியும் உ.த.மு.க. உள்ளே இருக்காமல், மக்களிடம் செல்லவேண்டும். நாள் தோறும் கூட்டங்கள் போடவேண்டும் ஒப்பாரியால் பயனில்லை. ஆயினும், நாளை இவ்விந்தியா இப்படியே இருக்குமா என்பது கேள்விக்குறியே.

இந்திய எல்லைப்புற மாநிலங்கள் எல்லாம் இன்று மாநிலக் கட்சியைத் தேர்ந்தெடுக்கவில்லையா? தமிழகம், ஆந்திரா, மேற்கு வங்கம், அசாம், பஞ்சாப் இவற்றில் எல்லாம் அந்தந்த மாநிலக் கட்சிகளின் ஆட்சிதானே நடைபெறுகின்றது. கருநாடகத்தில்கூட, எக்டேயின் தனிப்பட்ட சய்காலதானே. எனவே, அதனையும் ஒரு மாநிலக்கட்சி ஆட்சி என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக, இந்தி பேசாத மாநிலங்களில் எல்லாம் இதுவே நடைபெறுகிறது. இதிலிருந்து இந்தி பேசாத மாநிலங்கள் தேசிய ஆட்சியை விரும்பவில்லை என்று தெரிகிறதா?

நாளாக ஆக இராசீவின் போக்கில் மாறுதல் காணப்படுகின்றது. அவரிடம் மக்கள் நிறைய எதிர் பார்த்தோம். இளைஞர் என்பதால் நயன்மை தவறார் என எண்ணினோம். நிலைமை அவ்வளவு நிறைவளிப்பதாக இல்லை. தமிழீழக் கொள்கையில் அவர் அன்னையைக் காட்டிலும் பின்வாங்குகின்றார். மேலுக்குச் சாயம் பூசிச் சிக்கலைத் தீர்ப்பதாக நினைக்கின்றார். உள்ளே நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது, இந்திராப் பேராயம் வடக்கே சரிகிறது. ஓராண்டில் பாதிச் சரிவு, போகப்போக எப்படியோ? இரண்டாயிரத்தை எட்டுவதற்குள்ளாக இந்தியா ஒன்றுபட்ட நாடாக இருக்குமா என்பது ஐயமே? கிழடுப்பர்கள் ஒருகுறிப்பிட்ட காலவரையறையில் தான் அறுத்தல் செய்வர். அதன்பின் அவர்கள்...? வரலாறுகள் அவர்கட்குப் பாடம் புகட்டும். — மெய் அருண்மொழியன்

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும்' கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அமைச்சர்.

உலகில் மண் விடுதலைக்குப் போராடும் மக்களினங்கள்!

நமீபியா : ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென் மேற்குப் பகுதியில 3.18 ஆயிரம் சதுரக் கற்கள் பரப்பளவு உள்ள நாடுதான் நமிபியா. 18 ஆம் நூற்றாண்டுக்கு முன் ஆப்பிரிக்கக் கருப்பின மக்களின் பல பிரிவினர்களின தாயகமாக விளங்கியது நமீபியா. குறிப்பாக ஓம்போ இனம், டமாரா இனம், நாமா இனம், கெரெரோ இனம் ஆகிய மக்களினங்கள் தொல்குடி மக்களாவா.

1890 ஆம் ஆண்டு நமீபியாவைச் செருமானியர்கள் தங்கள் சுரண்டல் வேட்டைக் காடாக ஆக்கியதுமல்லாமல் ஆளுமையையும கையகபடுததிக் கொண்டு அங்குள்ள உழைக்கும் மக்களை கசக்கிப் பிழிந்து, அவர்களது உழைப்பைச் சுரண்டி அடிமைப்படுத்தி வந்தனர். தங்கள இனம் அடிமைப்படுவதை உணர்ந்து கொண்ட முற்போக்கு எண்ணங்கொண்டவர்கள் மக்களைத் திரட்டிச் செருமானியர்களுக்கு எதிராகப் பெரும்போராட்டங்களை நடத்தினர்.

அப்பொழுது செருமானிய மன்னனாக வீற்றிருந்த கொடியவன் கெய்சர் செருமனியில் இருநது ஒரு பெரும்படை ஒன்றை நமீபியாவிற்கு அனுப்பி ஆயிரக்கணக்கான போராளிகளையும், பல்லாயிரக்கணக்கான நமீபியா மக்களையும் கொன்று குவித்துப் போராட்டங்களை ஒடுக்கி இன எழுச்சிகளை அடக்கினான். இந் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம் 1904-க்கும் 1908-க்கும் இடைப்பட்ட காலம்.

இக்காலத்தில்தான் பிரிட்டிசு வெள்ளையர்களால் தென் ஆப்பிரிக்கா கையகப்படுத்தப்பெற்றுத் தங்கள் ஆளுமையை நிலை நிறுத்திய காலம். பிரிட்டிசு வெள்ளையர் நமீபியா மீது குறி வைத்துத் தெ ஆ. படைகளைப் பயன்படுத்தி 1915-ஆம் ஆண்டு நமீபியாவைத் தன் ஆளுமைக்குட்பட்ட ஒரு மாநிலமாக வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டது. இவற்றை எதிர்த்துப் போராடிய மக்கள் குழுக்கள் இணைந்து தென் ஆப்பிரிக்க தேசிய முன்னணியும் கூட்டுச்சேர்ந்து சுவாப்போ என்ற பெயரில் இன்று அரசை எதிர்த்துக் கருவியேந்திப் போராடி வருகிறார்கள். சுவாபபோ ஏற்றுக் கொண்ட மக்கள் தலைவராக நுசோமோ மிகத்தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார். உலகில் பல நாடுகள் நமிபியா விடுதலையை ஏற்றுக் கொண்டு போராட்டத்திற்கு உதவியும் வருகின்றன.

நிகாரகுவா : நடுவண் அமெரிக்காவில் உள்ள ஒரு சின்னஞ்சிறிய நாடுதான் நிகாரகுவா. நாட்டில பரம்பரை உரிமையோடும், வல்லதிகார அமெரிக்க முற்றாளுமை நாட்டின் ஆதரவோடும், மன்னராட்சி என்ற பெயரில் வல்லதிகார (சர்வாதிகார) ஆட்சி நடந்து கொண்டிருந்தது. ஆனால் இவ்வாட்சியில் மக்கள் பஞ்சத்தாலும், பசியாலும், வறுமையாலும் - ஏழ்மையாலும், ஆள்வோரின் கொடுமையாலும் பெருந்துன்பங்களுக்குட்பட்டுத் தொலைப்பட்டு வந்தனர். இக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாற்போல் 1979-ஆம் ஆண்டு சூலை மாதம் நிகாரகுவா நாட்டு மக்கள் மன்னா மீது வெறுப்பும், அரசு மீது எதிர்ப்பும் கொண்டு கிளர்ந்தெழுந்து, எழுச்சி கொண்டு பொதுவுடைமைப்புரட்சி செய்து மன்னனையும் ஆட்சியையும் தூக்கி எறிந்தார்கள். வீழ்ச்சிப் பள்ளத்தில் வீழ்ந்த மன்னன் மக்கள் கிளர்ச்சியை ஏற்றுக்கொண்டு ஒதுங்கி கொண்டான்.

நிகாரகுவா மக்கள்புரட்சிக்குப் பிறகு உண்மையான நிகாரகுவா மக்கள் குடியரசு நிறுவப்பட்டதோடு பொதுவுடைமை அரசை ஏற்படுத்திப் பசியைப் போக்கி பஞ்சம் நீக்கி, ஏழ்மையை விரட்டி வறுமையைக் களைந்து, மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வழிவகை கண்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தி வருகிறார்கள்.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரொனால்டு ரேகன் நிகாரகுவா மககள் குடியரசை எப்படியேனும் நீக்கிவிட்டுத் தன் கைப்பாவையாக ஒரு போலிப் பொய்ம்மையரசை நிறுவ வேண்டுமெனக கங்கணம் கட்டிவருகிறார். நிகாரகுவாவில் எதிர்ப்புரட்சியாளர்களை உருவாக்கி நிகாரகுவா மக்கள் குடியரசு மீது போர் தொடுக்க வைத்துத்தொல்லை கொடுத்து வருகிறது அமெரிக்கா.

இந்த எதிர்புரட்சி கூட்டம் காண்டரோ என்ற பெயரில் அருகல் உள்ள ஒண்டுராசு என்னும் நாட்டில் இருந்து அமெரிக்க உளவுப்படை (சி.ஐ.ஏ.) யினரிடமிருந்து பயிற்சி பெற்று நிகாரகுவா மக்களைக் கொடுமைக்கு உள்ளாக்கி வருகிறது. எதிர்புரட்சிப் படையில் 20 ஆயிரம் அமெரிக்க அதிரடிப் படையினர் ஊடுருவியுள்ளதாகவும் தெரிகிறது. இச்சூழ்ச்சிக் கூட்டத்தினரால் 9 ஆயிரம் நிகாரகுவா மக்கள் உயிரிழந்தும் 30 ஆயிரம் மக்கள் குடியிருப்புகளை இழந்தும் கொடுமைக்குள்ளாயுள்ளனர். இவ் வன்செயல்களைத் துணிவோடு எதிர்த்துப் போராடுவதோடு, தங்கள் நாட்டின் ஆளுமை உரிமை அமெரிக்க அடிமைகளிடம் போய் விடாமல் கண்ணும் கருத்துமாகக் காத்து வருகிறார்கள். உலகில பல நாடுகள் நிகாரகுவா மக்களுக்கு நல்லாதரவு நல்கியிருப்பதோடு அமெரிக்காவிற்கு எதிர்ப்பாகவும் குரல் கொடுக்கின்றன. முற்றாளுமைக்கும் உரிமைமீட்புக்கும் இடையில் நடக்கும இப்போராட்டத்தில் இறுதி வெற்றி எங்களுக்கே என நிகாரகுவா மக்கள் எக்காள முழக்கமிட்டுப் போர் பரணி பாடி நிற்கிறார்கள்.

— வியனரசு.

தேசிய விடுதலைக்குப் போராடுவோம்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் நலமுடன் சென்று, வெற்றியுடன் திரும்பி வர நல்வாழ்த்துகள்! அன்பன்,

—பாவலர். அருள் : செல்லத்துரை, திருச்சி-8.

18. வெற்றி பெறட்டும்!

0 (தொலைவரி வழி) தங்கள் மலேசிய வெளிநாட்டுச் செலவு வெற்றிபெற வேண்டுகிறேன்.

—மருத்துவர், முத்துச்செல்வம், தஞ்சாவூர்

19. இனிய வழிச்செலவு!

தொலைவரி வழி) காப்பான இனிய வழிச்செலவிற்கு எங்கள் வாழ்த்துகள்!

— அப்பர்சியப்பன்-சுசிலா, நெய்த்துக்கடவு.

20. காப்பான பயணமாகட்டும்!

0 (தொலைவரி வழி) இனிய காப்பான பயணத்திற்கு எங்கள் வாழ்த்துகள்!

...முத்துக்குமரன்-ஆறுமுகம்-துரையரசன்,
பல்லடம்,

21. செந்தமிழ்நாடு சீர்பெறும் சிந்தனை!

0 பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு தங்களின் அன்புப் பிணைப்பால் கட்டுண்டிருக்கும் வி. வில்வநாதன், தங்களின் மரபடி தொழுது வரைந்திருக்கும் மடல்.

தாங்கள் மலேசியா செல்ல விருப்பதைக் குறித்துப் பெருத்த மகிழ்ச்சி. தங்களின் செலவு வெற்றியடைய, எல்லாம் வல்லவன் தங்கட்கு நற்றுணையாயிருக்க வேண்டுகிறேன்.

திரைக்கடல் குளித்தெழும் செங்கதிர் வீச்சென
உரைபல நிகழ்த்திடும் உயர்தமிழ் ஏறே!
வெள்ளப் பெருக்கால் வீடுகள் இழந்த
கள்ளமில் குடிகள் கண்ணீர் சிந்திட
வெள்ளம் புகாத வீட்டினை யடைந்த
எள்ளள வேனும் இரக்கம் இல்லாக்
குள்ள மனத்தரைக் கும்பிடும் நாட்டின்
நிலையினை எண்ணி நெஞ்சந் தடிக்கும்
கலையெலாம் அறிந்த கனித்தமிழ்ப் பாவல!
செந்தமிழ் நாடு சீர்பெற் றுயர்ந்திடச்
சிந்தனைப் பயிரைச் செழித்திடச் செய்யும்
சொல்லேர் உழவரே! நல்லுளம் விரும்பும்
பல்லோர் போற்றும் பாவல ரேறே!
உறுபொருள் பேச்சில் உள்ளம் புதித்திட
நறுமணத் தும்பிபோல் மலேசிய நாடு
தங்களை யழைக்க நாங்களும் களித்தோம்!
விரும்பி யுங்களை விளையும் நிலமே
வரும்படி யழைத்தால் மகிழ்க்கடல் ஆடினேம்!
தங்களை யழைத்த தனிநனைத் தம்மில்
ஓங்குயர் தமிழ்த்தேன் ஊற்றி
வருக வருகவே வான்புகழ் பெற்றே!

—பாவலர். வீ. வில்வநாதன், வெங்காலூர்-16

22. வெற்றியுடன் திரும்பி வாருங்கள்!

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா அவர்களுக்கு வணக்கம்.

தங்களின் 2 ஆம் மலேசியச் செலவு குறித்து மிக்க மகிழ்ச்சி. அச்செலவு பல்வகையிலும் சிறப்புற்று, மொழி, இன, நாட்டு முப்படி உயர்வின் தங்கள் தொண்டுக்குப் பெருமை சேர்க்க இறைப் பேராற்றல் துணை நிற்க இறைஞ்சுகிறேன். மலேசிய நாட்டு ஆதரவும் ஈழத்தின்பால் பாய வழிவகை செய்துவிட்டு வெற்றியுடன் திரும்பி வாருங்கள்.

தங்களின் அன்புள்ள,

—கி. இளஞ்சேரல் முதுபாண்டியன், மேலாளியாறு.

23. தமிழின நலத்துக்குப் பெரிதும் ஆக்கம்!

0 வணக்கத்திற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம்.

தங்களின் 2 ஆவது மலேசியச் செலவு பற்றிப் பெரிதும் மகிழ்ந்தேன். தங்கள் செலவு அனைத்து நிலைகளிலும் வெற்றிபெற்றுத் தமிழ்மொழி, தமிழின நலத்துக்குப் பெரிதும் ஆக்கம் விளைக்கும் என்னும் நம்பிக்கை மிக்குடையேன். தங்களன்புள்ள,

—கடலூர் மணிமாறன், க.மு,
கிருட்டிணராயபுரம்

24. தனித்தமிழ் பணி தொடர்க!

0 தனித் தமிழ்க் காவலர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

தங்களுடைய மலேசியச் செலவு மகிழ்ச்சித் தரவும், வெற்றியடையக் கூடியதாக அமையவும், தங்களுடைய தனித் தமிழ்ப் பணி தொடரவும், எல்லாவகையிலும் சிறக்கவும், நலமே விளைக எனவும் வாழ்த்துகிறோம். தங்களின் அன்பு நிறை,

—உலகத் தமிழ்க் கழகம், வெங்காலூர்-21.

25. இனிய பயணமாக அமையட்டும்!

0 (தொலைவரிச் செய்தி) தங்கள் மலேசியப் பயணம் இனிதாகவும், மகிழ்ச்சியாகவும் அமைய வாழ்த்துகிறோம்.

—பொற்செழியன், சேரலாதன், கருணாநிதி,
வெங்காலூர்-7.

ஈரோட்டுப் பேரா(சையா)சிரியரின் எட்டப்பச் செயலைக் கண்டித்துத் தமிழ் நெஞ்சங்களின் மடல்கள்!

1. ஓதி உணர்ந்தும் தானடங்காப் பேதை!

பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய ஐயா வணக்கம தமிழ்நிலம் கிடைத்தது. நண்பர்கள் படித்தனர். உண்மையை அறிந்து 'எட்டப்பனின்' அழுக்காறு கண்டு மனம் வருந்தினர்..

"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

என்பதற்கேற்பவே நாம நடந்து கொண்டோம்.

"ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதை" இனியாவது திருந்தட்டும் அல்லது இயற்கையாகவே அவர் தண்டனையைப் பெறட்டும்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" என்பது மெய்யாகட்டும்.

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்" என்னும் குறள் கூறும் ஆற்றலுடையவர் தாங்கள் என அறிந்து ஊக்கம் பெறுகின்றேன். 'புதையம்பிற் பட்டுப் பாடூன்றும் களிறுபோல் பீடுபெற நிற்கும் தங்களுக்கு என்றென்றும் நலமே விளையுக! வளமே பெருகும்' அன்பன்,

— புலவர் ப. எழில்வாணன் பள்ளப்பட்டி.

2. தீட்டிய மரத்தில் கூர்பார்க்கும் தமிழன்!

வணக்கத்துக்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம் நலம். நலமே மலர்க. சூரியனைப் பார்த்துக் குரைக்கின்ற நாய்கள் பெருகி விட்டன. கொழு கொம்பாய் நம்மேல் படர்ந்த கொடிகள் கழுத்தை இறுக்கத் தொடங்கி விட்டன. தமிழின உரிமையையும் விடுதலையையும் தமிழ் கூறு நல்லுலகத்துக்கு உணர்த்தி வழிகாட்ட வந்திருக்கும் தங்களை, இழித்தும் பழித்தும் பேச ஒருவர் வந்து விட்டார்...

இனிய உளவாக இன்னாத கூறிக் காய் கவரும் வேலைக்கே அந்த ஈரோட்டாருக்கு நேரம் போதவில்லை. வழக்கு மன்றங்கள் வழுக்கு மன்றங்களான அமைப்பில் இத்தகையோரைத் தடுக்க என்ன சட்டம் வரப்போகிறது?

இந்தியத் தலைமை அமைச்சருக்கு இவர் எழுதித்தான் தங்களைப் பற்றித் தெரிய வேண்டுவது இல்லை இருப்பினும் தன்னைத் தொண்டனுக்குத் தொண்டனாகத் தாழ்த்திக் கொண்டு விபீடணனாகத் திகழ்வதைத்தெரிவிக்கவே அன்னவரின் மடல்வாலைக் குழைப்பதில் சிலருக்கு மகிழ்ச்சி,

வெறும் காழ்ப்புணர்ச்சியைக் கொட்டியே தமிழை வளர்க்க இதழ் தொடங்கிய அன்னாரைக் கூடப் பொறுக்கலாம். ஆனால் எம மதிப்பிற்குரிய தமிழறிஞர்கள் பல்லோர் அந்த நச்சுப்பொய்கைக்கு நன்னீராட எண்ணிச் சென்றுள்ளனரே - என் சொல்வது? நம் வழிச்செலவு நீண்டது. அதில் ஆக்க வேண்டியன, ஊக்க வேண்டியன ஏராளம். அந்நிலையில் தூற்றுமொழி ஒன்றே பயின்ற மு. சா. வுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அறிஞர்களுக்காக இரங்குகிறேன், வருந்துகிறேன். அவர்தம் கற்றுத் துறைபோன அறிவு இப்படி வீணாகலாமா? சிந்திக்கட்டும்.

இந்தத் தமிழனை — கூர்தீட்டிய மரத்தையே பதம்பார்க்கும் தமிழனை — தமக்குள் காட்டிக் கொடுத்தே, பன்னூற்றாண்டு அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழனை உணர்வூட்ட வந்திருக்கும் பேரியக்கமாம் தென்மொழியின் மீதும் தங்கள் மீதும் சேறு பூச நினைக்கும் இவர்களுக்காக இரக்கப்படுவோம். இவர்களும் கடைத்தேறட்டும் இல்லையேல் காலச் சல்லடையில் சலிக்கப்படுவார்கள், வரலாற்றிலே தூற்றப்படுவார்கள். வருந்தற்க அன்பு,

— தமிழ்ச்சுடர் மணிமுத்து, பழனி.

3. கூட்டிக் கொடுப்பதும் - காட்டிக் கொடுப்பதும் ஒன்றே!

அய்யா அவர்கட்கு நலம். தமிழ்நிலம் இதழ் எண் 71 கிடைக்கப் பெற்றேன் (1) பேராசிரிய தமிழினப் போலி மு. ச. சிவம் தாம் ஓர் அ........ல் என்பதை நன்றாகக் காட்டிக்கொண்டுள்ளார். கண்டிப்பாக காலம் அவருக்கு விடை சொல்லும்' கையாலாகாத நிலைக்கும் ஓர் எல்லை உண்டு; இந்த எ........லை அடிக்கிற காற்றில் எங்கு போய் விழப்போகிறதோ என்று அவருக்கே தெரியாது மானங்கெட்ட, கட்டிய பெண்டாட்டியைக் கூட்டி வைக்கும் இழிசெயலுக்கும் இழிவானது இவரது செயல்! இவரைப் பெற்றெடுத்தவளும் ஒரு தமிழச்சிதான்! தொலைந்து போகட்டும் தமிழ் இனநலம் காக்கும் அனைவரும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது!

(2) அவ்விதழ் 4-ஆம் பக்கத்தில் பாவலர் அவர்கட்கு ஒரு பணிவான வேண்டுகோள் விடுத்த நண்பர் சம்பூகன் விருப்பு வெறுப்பின்றித் தலைமையைப் பற்றி ஆய்வு செய்தால் நன்றாக இருக்கும் யாரையும் குறைவாக மதிப்பிட்டு இழித்தும் பழித்தும் பேசியும் எழுதியும் வருவது தென்மொழியின் வேலையன்று என்பதைச் சம்பூகனுக்கு உணர்த்துங்கள். சிங்களவரை அழிக்க புறப்படும் யாரையும் கையைப் பிடித்து யாரும் நிறுத்தவில்லை ஈழத்தமிழன் கல்லறையில் துயில்கொள்ளும்போது. திருப்பள்ளி எழுச்சிப் பாடத் தலைவர்கள் போவார்களோ என்னவோ? பொறுத்து இருந்து பார்ப்போம்!

(3) வகுப்புரிமையைப் பற்றி தங்களின் கருத்தை மீண்டும் தென்மொழியில் தமிழ்நிலத்தில் வெளியிட வேண்டும் தாங்கள் பாதை விலகிச் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார் சம்பூகன் சாதி இல்லை என்பது வேறு! எந்த சாதியைக் கடந்த 5,000 ஆண்டுகளாகத் தாழ்த்தி வந்தானோ அது தன்னிறைவு பெறும்வரை வகுப்புரிமை தேவை. அதைத்தான் பெரியார் சொன்னார். இன்று சாதி இல்லை என்று சொன்னால், மேல்தட்டுப் பார்ப்பனர் மட்டுமே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். எனவே வகுப்புரிமை தேவை.

—மு. உலகமுதல்வன், க.மு திருவண்ணாமலை

4. 'நமஸ்தே' போட்டு, நாயினும் கீழாயினரே!

பேரன்பின் அய்யா அவர்களுக்கு வணக்கம். திரு. குமரப்பன் அவர்களின் மறைவுபற்றித் தங்கள் வழி கேட்டு மிகவும் துயருற்றேன். 'தென்மொழி'யில் அவர் பணியாற்றிய காலத்தில், தென்மொழிக்கும் எனக்கும் உண்மையாகத் துணை நின்றது என் நெஞ்சில் நிறைந்து நிற்கின்றது அவர்தம் குடும்பத்தார் எவ்வாறு ஆறுதல் அடைவர்? நினைப்பினும் நீர் மல்குகின்றது

'தமிழ்நிலம்' வந்தது திடுக்கிட்டேன்,

"எற்றிற் குரியர் கயவர்ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து"

'அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்"

என்னும் குறட்பாக்களுக்கு இலக்கணமாகத் திகழ்கின்ற பேராசிரியர், காட்டிக்கொடுப்பு மடல் வழியாகத் தம்மை மிகவும் இழிந்தவர் என்று காட்டிக் கொண்டு விட்டார். நமசுதே' போட்டு நாயினும் கீழாயினர். தூ!' இவரும் ஒரு படித்தவரா, தமிழரா என்று எண்ண வேண்டியுள்ளது.

மற்றும், திருச்சி சம்பூகனார், "தளபதி வீரமணி அவர்களைவிடத் தாங்கள் பெரிய தலைவர் என்னும் செயலில் அங்குச் செயல் பட்டதுதான் திராவிடர் கழகம் உங்களைத் திரும்பிப் பார்க்காமல் இருப்பதற்கே காரணம்" என்று கொச்சைப் படுத்தியுள்ளார்

பெரிய கூட்டம் மட்டும் இருந்தால், பெரிய தலைவர் ஆகிவிட முடியாது, அப்படிப் பார்த்தால், தளபதியாரை விடச் செல்வி செயலலிதா பெரிய தலைவரே, திருவள்ளுவரைப் போற்றுவோர் குறைந்த தொகையினர் என்பதற்காகத் திருவள்ளுவர் சிறிய தலைவராக ஆகி விடுவாரா?

தூய்மையான அறிவும், அறிவுகூட வேண்டா. அதைவிட உண்மையான பொது நலம் கொண்டவனே பெரிய தலைவனாக முடியும். தகுதி மீறித் தலைகொழுத்தத் தனமாக மடல் எழுதியுள்ளார்.

தங்களன்பின், —து. அன்பழகன், ம. காயல்.

5. இப்படியும் ஒரு கல்லூரி ஆசிரியரா?

மெய்த்திறம் செறிந்த சொற்றமிழ் அறிஞர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

வணக்கம். 'தமிழ்நிலம்' (இதழ் எண் 71) கிடைக்கப் பெற்றேன். ஈரோட்டுப் பேரா(சையா)சிரியர், தங்களைக் காட்டிக் கொடுத்த கயமையைப் படித்து அதிர்ச்சியடைந்தேன்.

அரத்தம் கொதித்துக் கொப்பளிக்கின்றது. இப்படியும் ஒரு கீழ்மையான கல்லூரி ஆசிரியரா? கட்டிய மனைவியை அடுத்தவனிடம் படுக்க வைப்பதற்கும், இனத்தைக் காட்டிக் கொடுப்பதற்கும் அப்படியொன்றும் வேறுபாடு அதிகமில்லை. சீச்சீ! நாயும் பிழைக்காதே இந்தப் பிழைப்பு!

வெளியே கவர்ச்சி வைத்து உள்ளத்தில் கருப்பு வைத்த கயமைத் தனத்தை என்னென்பது?

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

அனைத்து விடுதலைக்கும் அடிப்படை தமிழக விடுதலையே!

தமிழ் நெஞ்சங்களின் மடல்கள் !

[முன் பக்கத் தொடர்ச்சி]

பொங்கியெழும் சுடர்ஞாயிறைப் பார்த்து குரைத்த சுணங்கனுக்கும் இவருக்கும் வேறுபாடே காண இயலவில்லை. தங்களின் மெய்த்தொண்டு தடைகளைக் கடந்தோங்கும் பெற்றியது காலம் இந்த உண்மையை செவ்வனே உணர்த்தும்.

இங்ஙனம், - வள்ளிகேள்வன், ஈரோடு.

6- சூதுமதியினர் வாழ்ந்ததில்லை !

அன்பு கனிந்த அய்யா! வணக்கம்.

இனம், மொழி, நாட்டினைக் காக்கத் - தம் துன்பங்களையும் பாராமல் உழைக்கின்ற நிலையில் கயவர்களின் எட்டப்பன்களின் உடனிருந்தே குழி பறிக்கின்ற மடமை மனத்தரின் கழுத்தறுப்புச் செயலைத் 'தமிழ்நிலம்' இதழ் எண். 71 இல் கண்டு பெரும் அதிர்ச்சி பெற்றேன்.

தமிழும், தமிழ்க் குமுகாயமுமே தம் வாழ்வாகக் கொண்ட தங்களுக்கா இத்தகு இடையூறுகள் ! நினைக்கவே, மனம் இடர்கின்றது.

சூழ்ச்சிகள் ஒருநாளும் வென்றதில்லை! - கொடும்
சூதுமதியினர் வாழ்ந்ததில்லை.

என்னும் அளவில் பொய்யரும், தங்களின் பெருமைகள் கண்டு பொருமை கொள்ளும் கீழ் மதியினரும் தூற்றுவதால் தங்களின் பெயருக்கு களங்கம் என்றும் ஏற்படாது.

"போற்றுவார் போற்றட்டும்,
புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்" நம் பணியை தொடர்ந்து செய்வோம்.

"வாய்மையே வெல்லும்"

தங்களன்புள்ள, தென்மொழித் தொண்டன்,
— பாவலர். தாழை. நா. இளவழகன். மணவை.

7. தமிழர்க்குப் பிறந்திருந்தால் எழுதுவாரா ?

ஐயா வணக்கம். 'மக்களே போல்வர் கயவர்' என்றார் பேராசான் வள்ளுவர். மு. சதாசிவம் என்றொரு கயவர் பேராசிரியர் என்ற பட்டத்திற்கே இழுக்கு உண்டாக்கிவிட்டார். தமிழ்நிலம் 27-4-86 இல் வெளியானதில் அவர் செய்திருந்த அறிவிலித் தன்மை கண்டு அதிர்ச்சியாகி விட்டேன். அதைப் படித்தவர்களும், தமிழன் இப்படியும் வாழ்கிறானே எனப் பெருமூச்சு விட்டனர். மாந்தனுக்கு உள்ள உறுப்புகளைக் கொண்ட அக் கயவர், மாந்தத் தன்மையைவிட்டுவெகு தொலைவிற்குச்சென்றுவிட்டார். இவருக்குப் பேராசிரியர் பட்டமா ? தமிழனைத் தமிழன் காட்டிக் கொடுத்த வரலாறுகள் உண்டு. இராமாயணத்தில் வரும் வீடணன் தனக்கு அரசப் பதவி வேண்டும் என்பதற்காகத் தன் உடன்பிறந்த இராவணனை வடவரசன் இராமனிடம் காட்டிக் கொடுத்தான். அதே போல மனோன்மணியத்தில் பாண்டிய மன்னன் சீவகனின் அமைச்சன் குடிலன் என்பவன், தனக்கு அரசப்பதவி வேண்டும் என்பதற்காகச் சேர நாட்டுப் புருடோத்தமனிடம் சீவகனைப்பிடிக்கக்கரவு வழி (சுரங்கப்பாதை) யைத் தெரிவிக்கிறான். வீடணனும்-குடிலனும் காட்டிக்கொடுத்தார்கள். வீடணன் இராவணனைக் காட்டிக் கொடுத்ததற்காக, அரசப் பதவியை இராமன் கொடுத்தான். குடிலன் தன் அரசன் சீவகனைக் காட்டிக் கொடுத்ததற்கு அரசப்பதவி கொடுக்கவில்லை. பகரமாக குடிலனுக்குக் கைவிலங்கு-கால் விலங்கு கொணர ஆணையிட்டுப், 'பூட்டுமின் நன்றாய்' என்று குடிலனைக் காட்டி, அந்த இடத்திலேயே அந்த நன்றி கெட்ட நாய்க்கு விலங்கிட்டான் சேர நாட்டுச் செம்மல், தமிழரசன் புருடோத்தமன். இராமன் என்ற வடவரசனுக்கும், புருடோத்தமன் என்ற தமிழ் வேந்தனுக்கும் உள்ள நேர்மை குணம் காணீர்! எனவே, காட்டிக் கொடுக்கும் கயவர் இன்று மட்டுமன்று, என்றுமே உண்டு. கட்டபொம்முவை எட்டப்பன் காட்டிக் கொடுத்தான். இன்று கயவர் சிவம் என்பார் நன்றிபறிதலைக் கொன்று தங்களை வடவர்களுக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறார். சதாசிவனின் இச் செயலை, நல்ல மறவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். மானமுள்ளவன் அவரை மதிக்கமாட்டான்.

சதாசிவனின் சூழ்ச்சி தமிழர்களிடம் செல்லாது. வடவர்கள் கோழைகள் இவர்களிடம் வேண்டுமானால் நடக்கலாம். எட்டப்பனுடைய வழித் தோன்றல்கள் இன்னும் மக்களிடம் இழிந்தவர்களாகவே காட்சி அளிக்கிறார்கள். அதே போன்று சதாசிவனும் இனி இத் தமிழகத்தில் காட்சி அளிப்பார். இன்னும் தமிழர்களுக்காக வாழும் தமிழ்த் தலைவர்களையும் காட்டிக் கொடுப்பார்.

எனவே, தமிழ் மக்கள், தமிழர் தலைவர்களை இப்படிப்பட்ட கயவர்களிடமிருந்து காக்க மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். இருப்போம். எனவே, ஐயா அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன். யாரையும் எளிதாய் நம்பிவிடாமல் தேர்ந்து -தெளிந்து நட்பு கொள்ளல் வேண்டும்.

பாவலரேறு மீது நடுவண் அரசு ஓர் வழக்குத் தொடுத்தால், அவ்வழக்கில் ஓர் சான்றாளராகஏற்றுக் கொள்ள கெஞ்சுகிறார் இவர். எவ்வகையான மடமைத்தனம்; அவ் வகையில் ஒரு வழக்கு நடந்து, சதாசிவன் வழக்குமன்றஞ் சென்று, சான்று கூறிவிட்டு வரமுடியுமா ? இங்குள்ள தமிழர் உன்னிப் பார்க்க மாட்டார்களா ? அன்றி அறிவிலிகளா ? எவ்வளவு துணிச்சல் இக் கயவருக்கு. உண்மையில் இவர் தமிழனுக்குப் பிறந்திருந்தால், இவ்வகையில் எழுதுவாரா ?

இங்ஙனம், -அதியமான்: தாழையூற்று.

8. காலம் அவருக்குப் பாடம் புகட்டும் !

பேரன்புக்கும், பெரு மதிப்பிற்குமுரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம் ! ஈரோடையிற் பேராசிரியத்தொழில் புரிபவர், இந்தியத் தலைமை அமைச்சருக்கு 'நமசித்தே'த் தெண்டனிட்டு எழுதிய மடலைத் 'தமிழ்நிலம்' இதழ் எண். 71 இல் படித்தேன். இவர்போலும் இனக்கொல்லிகளை ஏன் தாங்கள் உடன் பிறப்புப்போலும், பற்றும்-பாசமும் வைத்து உறவு கொண்டு தொல்லைப்படுகிறீர்கள் ? சொல்லும் செயலும் ஒருவரைக் காட்டிக்கொடுத்து விடுமே ! தமிழின் முப்படி நிலையிலும் மாறாதிருக்கும் மாந்தர்களை மட்டிலும் நெருக்கமான இயக்கத்துக்குப் பயன்படுத்துங்கள் இவர் பட்டியலிட்டுள்ளனவெல்லாம் குற்றங்களெனில், இவரும் ஒரு காலக்கட்டம் வரை அக் குற்றங்களைச் செய்தவர்தாமே ? இப்பொழுது கரியாள (அப்ரூவ)ராக மாறினாலும் குற்றம் குற்றமே. நயன்மை மன்றம் விட்டாலும் மக்கள் மன்றம் விடாது. எந்தக் காலத்திலும் இப்படியொருவர் இருப்பார் போலும். காலம் அவருக்குப் பாடம் புகட்டும். இதற்கான பயனை அடைவார். 'தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையைத்தான் அறுப்பான்' இது மாறாத மெய்ம்மம் ஆகும். எனவே, கலங்காதிருங்கள் உண்மைகளும், அவற்றின் நிலைக்களன்களான தூய நெஞ்சங்களும் தங்கள் பக்கமே! தொடரட்டும் தங்கள் தூய தொண்டு! வெல்க தங்களின் செயற்பாடு! தங்கள் அன்புள்ள,

—கி. இளஞ்சேரல் முதுபாண்டியன்,
மேலாவிபாறு.

களையெடுக்க வேண்டும் !

(பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.)

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
 கேள்போல் பகைவர் தொடர்பு — [line not printed]

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
வையம் இவர்க்கென்றார்
கேள்போல் நமைச்சூழ்ந்து கேடெண்ணு வோரைக்
கிழித்தெறிந் திடல்வேண்டும் !
கற்றவர் தாமே கயமை புரிந்தினத்தைக்
காட்டிக் கொடுக்கின்றார் !
மற்றவர் காலநக்கி மானத்தை விட்டிழிந்து
மண்ணடிமை செய்கின்றார் !
நத்திப் பிழைப்பவர் நாயினுங் கீழவர்
நன்றியில்லாதவர்கள் !
கொத்தடிமைசெய் திழிவார் மிகக்குறுகிக்
கொள்கை யுரமிலரார் !
எட்டப்பர் வீடணர் எங்கும் இருக்கின்றார்
எச்சரிக்கை யாயிருப்போம்,
பட்டியல் போட்டப் பகைவரைஒழிப்போம்
பள்ளம் பறிப்பவரை.
குலத்தை அழிக்கவந்த கோடரிக் காம்புகள்
குள்ள நரிபோல்வார்
நலத்தை யழித்தே நமைக்காட்டிக் கொடுப்பர்
நாம்விழிப் போடிருப்போம் !
விளையும் பயிரை அழித்திடும் களைகளை
விரைந்தே எடுத்திடுவோம்!
களையெடுக் காமல் பயிர்வளராது
கருத்தினில் இதைப்பதிப்போம் !

எளியவர் அல்லர் !

வள்ளிகேள்வன், ஈரோடு.

மானமொன்றிலர் மதிதெளிந்திலர்
மாசுநீங்கிலர் தீஞ்சுவைத்
தேனையேவெறுத் தேங்கியேமலம்
தேரும்கீழ்மையர் சேர்குணத்(து)
கூனலேமிகு பொய்யரானஎட்
டப்பருக்கெளி யாரலர் !
மானமேமிகு எங்கள்பாவலர்
ஏறெனபுகல், நெஞ்சமே ! 1

சொல்லில்வல்லர் சோர்வைவென்றவர்
தூயசெந்தமிழ் நாவிலே
துள்ளும்மாண்பினர் தளர்ந்தகாயினம்
துலங்கவேண்டிமெய்த் தொண்டுசெய்
வல்லமைமிகு வினைஞர்சீர்வழு
வாதபாவலர் ஏறதாம்
புல்லரானஎட் டப்பருக்கெளி
யாரலர்புகல், நெஞ்சமே ! 2

பணங்கொடுத்திடின் பதரையேபுகழ்ந்
தோங்குபாரியாய்க் காட்டுவார்
இனஞ்சிதைத்திட விரும்புவடவர்முன்
என்றுமேதலை தாழ்த்தியே
வணங்கிநிற்றுரைப் பார்கள்கீழ்மைஎட்
டப்பருக்கெளி யாரலர்
இனந்தெளிந்திட உழைக்கும்பாவலர்
ஏறெனப்புகல், நெஞ்சமே ! 3

கற்றசெந்தமிழ் விற்றுவாழ்பவர்
கண்ணியம்தவிர் நீர்மையர்
பெற்றதோர்குணம் நன்றியன்றழுக்
காறெனக்கொளும் கீழ்மதி
வெற்றர்பொய்ப்பத ரானமூடர்எட்
டப்பருக்கெளி யாரலர்
சொற்றமிழ்த்திறம் நீடுபாவலர்
ஏறெனப்புகல், நெஞ்சமே ! 4

மூன்றுநாளினை நாட்டினார்தமிழ்
நாட்டுவிடுதலைப் பாவினை
ஊன்றினார்உர வோருளத்தினில்
உயர்ந்தபாவலர் ஏறதாம் !
கூன்றிகழ்மதிக் சோரர்தீயழுக்
காறுநெஞ்சு குடைந்திடக்
காந்துகின்றஎட் டப்பருக்கெளி
யாரலர்புகல் ! நெஞ்சமே ! 5

பொங்குவெங்கதிர் போக்கும்வல்லிருள்
என்னுமுண்மை பொறுக்கிலா
சங்கைவஞ்சகர் தாம்செழிப்புறத்
தம்மினத்தையே ஏய்ப்பவர்
மங்குகீழ்மதிப் பேடியானஎட்
டப்பருக்கெளி யாரலர்
இங்குவண்டமிழ் ஆண்மைவீறிய
ஏறெனப்புகல் ! நெஞ்சமே ! 6

அண்ணாவும், தம்பியும்

"அண்ணா"

"என்ன தம்பி?"

"நியூயார்க் நகரில் உள்ள உலக நாடுகள் ஒன்றிய தலைமை அலுவலகத்தில், நடுநிலை நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கூட்டத்தில் நமது தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி பேசியிருக்கிறாரே! படித்தீர்களா ? அண்ணா!

"என்ன தம்பி, பேசியிருக்கிறார்?"

"தென்ஆப்பிரிக்காவில் விடுதலைப் போராட்டம் வலுப்பெற்று வருகிறது, அந்த விடுதலைப் போராட்டத்துக்கு நாம் ஆதரவு தரவேண்டும் - என்று பேசியிருக்கிறார்!"

"அப்படியா? நல்லதுதானே!"

"தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க மாட்டோம் என்று சொல்பவர், தென் ஆப்பரிக்க விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே!"

"ஆமாம்"

"இலங்கை அரசைப் போல், தென் ஆப்பிரிக்க அரசும், நடுநிலை நாடுகளுடன் ஒன்றாக இந்திய அரசுடன் சேர்ந்து விட்டிருந்தால், அப்படிச் சொல்ல மாட்டாரோ?"

'எனக்குத் தெரியாது தம்பி! —தமிழவேள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 72] பதிவு எண்: TN/MS (C) 657

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்.

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5
தொலைபேசி எண்: 847829
உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக்
கட்டணம் உரு. 18-00

பெறுநர்.
திரு/திருவாட்டி

தாள்-அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.